ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்!

தமிழ்நாட்டில் இன்றைக்கு நடைபெறுவது `டம்மி அரசாங்கம்'!

சென்னையில் மணவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை, செப்.9-

சென்னையில் மாதவரம் பகுதிக் கழகப் பொருளாளர் சி.கே.கோபால் இல்லத் திருமண விழாவில், மணமக்கள் சி.கே.ஜி.ஜெகதீஷ் - எஸ்.சுபாஷினி என்கிற திவ்யா இணையரின் திருமணத்தை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி பேசிய எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு:-

இன்றைக்கு நம் மாதவரம் பகுதிக் கழகப் பொருளாளர் அண்ணன் சி.கே.கோபால் நினைவில் வாழும் அக்கா பூசாணம் ஆகியோருடைய அன்புமகன் ஜெகதீஷ், ராணிப்பேட்டை மாவட்டம், விண்டர்பேட்டை ஸ்ரீதர், திருமதி லதா ஆகியோருடைய அன்பு மகள் சுபாஷினி என்கிற திவ்யா அவர்களுக்கும், திருமணத்தை நாம் இங்கே நடத்தி வைத்திருக்கின்றோம்.

பாரம்பரியமிக்கக் கழகக் குடும்பம்

அண்ணன் கோபால் அவர்களுடைய குடும்பம், பாரம்பரிய மிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் நம் கழகக் குடும்பம். அண்ணன் கோபால் அவர்களைப் பற்றி, உங்களிடத்தில் நான் சொல்லத் தேவையில்லை. நீங்கள் அத்தனை பேரும் அவரை நன்கு அறிந்தவர்கள். கடந்த 40 ஆண்டுகளாக வார்டு பிரதிநிதியாக, வார்டு செயலாளராகப் பல்வேறு நிலைகளில் கழகப் பணியாற்றி, இன்றைக்கு மாதவரம் பகுதி கழகத்தின் பொருளாளராகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்தான் அண்ணன் கோபால் அவர்கள்.

கழகப் பணி மட்டுமல்லாமல் நகர் மன்ற உறுப்பினராக மக்கள் பணியிலும் சிறப்பாகச் செயல்படக்கூடியவர்தான் அவர். அதுமட்டுமில்லை, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று, கிட்டத்தட்ட எட்டு முறை கைதாகியவர் அண்ணன் கோபால் அவர்கள். அவர் மட்டுமல்ல, அவருடைய துணைவியார் பூங்கொடி அவர்களும், இன்றைக்கு மாமன்ற உறுப்பினராகச் செயல்பட்டவர்.

இந்தத் திருமணத்தை நடத்தி வைப்பதில், எனக்குக் கூடுதல் பெருமை என்னவென்றால், மணமகன் தம்பி ஜெகதீஷ் அவர்கள் பாக இளைஞர் அணி அமைப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். அவர் மட்டுமல்ல, அவருடைய சகோதரர் ராஜேஷ் இளைஞர் அணியில் வட்ட அமைப்பாளராக இருக்கின்றார். மணமகனுடைய மற்ற சகோதரர்கள் தர்மராஜ், சீனிவாசன், வீரன் இவர்கள் எல்லோருமே கழகத்திற்காக இன்றைக்கும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி கழகக் குடும்பத்தின் மணவிழாவை நடத்தி வைப்பதில் நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

குடும்ப பாசப் பிணைப்பு

அண்ணன் கோபால் அவர்களும், மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களும் என்னிடத்திலே தேதி கேட்டு வந்து, திருமண நாளை என்னிடம் குறிப்பிடும்போது, 'சட்டப் பேரவை நடந்து கொண்டிருக்கிறது, என்னால் மாதவரம் வரைக்கும் வர முடியாது என்று சொன்னவுடன், உடனே அவர்கள் சொன்னது, நீங்கள் மாதவரம் வரைக்கும் வர வேண்டாம், நாங்கள் எல்லோரும் குறிஞ்சி இல்லத்துக்கு வந்துவிடுகிறோம், திருமணத்தை உங்களுடைய வீட்டிலேயே நடத்திக் கொடுங்கள் என்று உரிமையோடு கேட்டார்கள். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு இந்தத் திருமணம் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இதுதான் கழக உடன்பிறப்புகள் நமக்குள் இருக்கக்கூடிய அந்த உணர்வு, குடும்ப பாசப் பிணைப்பு.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் வெற்றிவாய்ப்பை இழந்திருக்கிறோம். வெற்றிவாய்ப்பை இழந்தாலும், இன்றைக்கு ஒரு சிறந்த எதிர்க்கட்சியாக, ஆக்கப் பூர்வமான எதிர்க்கட்சியாக, மக்கள் மன்றத்தில் ஒவ்வொரு நாளும் கேள்வி கேட்டு, அதில் நாம் வெற்றிபெற்றுக் கொண்டிருக்கிறோம்.

'டம்மி அரசாங்கம்'

இன்றைக்கு அமைந்திருக்கும் அரசாங்கம் எவ்வளவு பெரிய `டம்மி அரசாங்கம்' என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

இன்றைக்கு ஆட்சிக்கு வந்த பிறகு, இவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில், இதுவரைக்கும்ஒன்றையாவதுநிறைவேற்றி இருக்கிறார்களா என்றால், முழுமையாக எதையுமே நிறைவேற்றவில்லை. வெறுமனே, நம் திராவிட மாடல் ஆட்சியின் நம் தலைவர் கொண்டுவந்த திட்டங்களின் பெயர்களை மட்டுமே மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அத்தனை பேரும் சட்டமன்றத்தை நேரலையில் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். மக்கள் பிரச்சினையைப் பற்றி, நாங்கள் கேள்வி கேட்டால், அந்தக் கேள்விக்கான பதிலை, அந்த துறை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கொடுப்பதில்லை. நாம் ஒன்று கேட்டால், நாம் ஆச்சரியப்படுகிற அளவுக்கு அவர்கள் ஒரு பதிலைச் சொல்கிறார்கள். முதலமைச்சர் உட்பட எந்த அமைச்சரும் அவர்கள் துறை சம்பந்தப்பட்ட எந்தக் கேள்விக்கும் சரியான பதிலைக் கொடுப்பதில்லை.

இவர்கள் எப்படி என்றால், நமக்கு அமைந்திருக்கக்கூடிய முதலமைச்சர் அவர் வாயையே திறப்பதில்லை. இப்படித்தான் இந்த அரசாங்கம் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் புரிந்து கொண்டு, எதிர் வரும் காலங்களில் நம் கழகப் பணிகளை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று இந்தத் திருமண விழாவின் மூலம் உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மணமக்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்ற அதேநேரம், அவர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வைக்கின்றேன். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு சுயமரியாதையுடன் விட்டுக் கொடுக்காமல் இணைந்து வாழ வேண்டும். அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தை, அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு அழகான தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்தச் சிறப்பான வாய்ப்பை அளித்த அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்து, மணமக்களுக்கு, மீண்டும் அத்தனை பேரின் சார்பாக, நம் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு மணமக்களை வாழ்த்தி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

பங்கேற்றவர்கள்

ஆறுமுகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், துணை அமைப்பாளர் சீனிவாசன், கேபிள் கணேசன், மணிவண்ணன், பகுதித் துணைச் செயலாளர் மோகன், வட்டக் கழகச் செயலாளர் பிரேம்குமார், துணைச் செயலாளர் உசேன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் வினோத், மணலி ஸ்டாலின் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிய

சட்டப்பேரவைத் தலைவரின் நடவடிக்கை சரியல்ல!!

மனிதநேய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி பேட்டி!

சென்னை, செப்.9-

சட்டமன்றத்தில் சட்ட மன்ற விதிகளுக்கு முரணாக முதலமைச்சர் பேசிய கருத்துக்களை அவை குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த திமுக சட்டமன்ற உறுப்பினர்களை அவை காவலர்களை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றிய சட்டப்பேரவைத் தலைவர் நடவடிக்கை கண்டித்து மனிதநேய ஜனநாயக கட்சி சட்டமன்ற உறுப்பினர் தமிமுன் அன்சாரி சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தார்.

அவர் அவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நேற்று சட்டமன்றத்தில் காவல்துறை மானிய கோரிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும் பொழுது மானிய கோரிக்கைக்கு சம்பந்தமில்லாத பல விஷயங்கள் பேசப்பட்டது, குறிப்பாக சர்க்காரியா கமிஷன் குறித்தும் மிசா சட்டம்

குறித்தும் முதலமைச்சர் பேசியதால் திமுக சட்ட மன்ற உறுப்பினர்கள் அதனை எதிர்த்தனர்,

நேற்று பேச வாய்ப்பு கிடைக்காததால் இன்று பேச வாய்ப்பு கேட்டனர்.

அந்த வாய்ப்பின் போது முதலமைச்சர் பேசிய சட்ட விதிகளுக்கு முரணான கருத்துக்களை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

குறிப்பாக மிசா குறித்து முதலமைச்சர் பேசியதை நீக்கி இருக்க வேண்டும், சர்க்காரியா கமிஷன் பற்றி ஏற்கனவே சட்டமன்றத்தில் பலமுறை பேசப்பட்டு விட்டது, குறிப்பாக சர்க்காரியா கமிஷன் குறித்து முன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆர் அவர்களிடம் அப்போது கேட்டபோது, எனக்கு எதுவும் தெரியாது வழக்கறிஞர் சொன்னதைத்தான் சொன்னேன் என்று கூறியிருந்தார், பின்னர் அந்த வழக்கு நிரூபிக்கப்படவில்லை.

இது பொன்ற நிரூபிக்கப்படாத ஒன்றை, வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் நிரபராதி என்று சொல்லப்பட்ட ஒன்றை, குறிப்பாக மறைந்த முன்னாள் முதல்வரை கலங்க படுத்தியிருப்பது என்ன நியாயம், எனவே இது போன்ற சட்ட விதிகளுக்கு முரணான கருத்துக்களை நீக்க வேண்டும் என்று தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர், அதை நீக்கி இருந்தால் எந்த பிரச்சினையும் இல்லை, அதனை நீக்காததால் தான் தி.மு.க. உறுப்பினர்கள் தர்ணா செய்தனர், தர்ணா செய்வது என்பது ஜனநாயக நடைமுறை , இது தவறானது அல்ல, இது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட ஒரு அம்சம், அந்த நேரத்திலாவது சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் நீங்கள் உட்காருங்கள் மீண்டும் பரிசீலிக்கிறேன். அதனை அவை குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்று என்று ஒரு வாய்ப்பு தந்திருக்கலாம், ஆனால் சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை ஏற்க மறுத்து அவர்களை அவையில் இருந்து வெளியேற்ற சொன்னது நல்ல நடைமுறை அல்ல, எனவே சட்டப் பேரவைத் தலைவரின் இந்த நடவடிக்கையை கண்டித்து மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் நான் வெளிநடப்பு செய்துள்ளேன். இவர் அவர் கூறினார்.

சட்டப்பேரவையில் உடல் மொழிக்கு வேலையில்லை!

உரையாற்றுவதுதான் உங்கள் வேலை முதல்வர் விஜய்!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் - சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.9-

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

எல்லாவற்றையும் செய்துவிட்டு பின்பு வீட்டுக்குப் போய் #TWEET போடுவது இன்னும் நீங்கள் மாண்புமிகு ஆகவில்லை என்பதையே காட்டுகிறது.

முதல்முறையாக நீங்கள் செய்திருந்தால் உங்களின் இந்த விளக்கத்தை உண்மையென மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

ஆனால் தமிழ்நாட்டு சட்டமன்ற வரலாற்றில் யாரும் இதுவரை செய்திராத கீழ்த்தரமான செயலை நீங்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றப்பிறகு இது இரண்டாவது முறையாக செய்திருக்கிறீர்கள்.

எனவே வேண்டும் என்றே திட்டமிட்டு உள்நோக்கத்துடன் தியாக வரலாற்றுக்கு சொந்தமான தலைவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்திருக்கிறீர்கள்.

உழைப்பைத்தந்து, தியாகத்தை தந்து இந்த முதல்வர் பொறுப்புக்கு பல காலம் மக்கள் பணியாற்றிய பின் வந்திருந்தால் இதன் வலிமையை உணர்ந்திருப்பீர்கள்.

ஊதாரித்தனமான வசனங்கள் பேசி வலைதள பொய் பரப்புரை மூலம் பத

விக்கு வந்ததால் முதல்வர் பொறுப்பின் மாண்பும், சட்டமன்ற மாண்பும் இன்று தங்களால் கூனிக்குறுகியுள்ளது. இதனால் தமிழ் நாட்டு மக்கள் தலைகுனிந்துள்ளனர்.

காவல்துறை மானியத்தின் பதிலுரையில் பதிலே இல்லாத பதிலுரையை அளித்த வரலாற்றைப்படைத்த முதல்வர் தாங்கள்.

எதிர்காலத்தில் சட்டமன்ற நடவடிக்கைகளை அறிந்துக்கொள்ள குறிப்புகளை படிக்கயிருக்கும் அடுத்த தலைமுறையினருக்கு நீங்கள் பதில் அளிக்கத்தெரியாத பொம்மை முதல்வர் என உங்களை நீங்களே பதிவிட்டுவிட்டீர்கள்.

எனவே பழிப்பதற்கும், திமுகவை குற்றம் சுமத்துவதற்கும் நேரத்தை வீணாக்காமல் முதல்வர் என்னும் உயரிய பொறுப்புணர்ந்து பணியாற்றுங்கள்.

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆ. கிருஷ்ணசாமி - நாமக்கல் ப.ராணி பங்கேற்பு!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப் 9-

கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் குறிஞ்சி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தி.மு.க. தலைமைக் கழக செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படியும், கழகத் தலைவரின் ஆணைக்கிணங்கவும், கழக அமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் கழக மறுசீரமைப்புப் பணிகள் மாநிலம் முழுவதும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, கிளைக் கழகம் முதல் வட்டம், பேரூர், ஒன்றியம், நகரம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு மற்றும் அமைப்புத் தேர்தல் பணிகள் தொடர்பாக தலைமைக் கழகம் வகுத்துள்ள வழிகாட்டுதல்களை விளக்கவும், கள நிர்வாகிகளின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறவும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி நடைபெற்ற இந்த அவசர செயற்குழுக் கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் முன்னிலை வகித்து தீர்மான விளக்க வுரையாற்றினார்.

இக்கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்ட கழக மறுசீரமைப்புப் பணிகளுக்காக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தலைமைக் கழகப் பிரதிநிதிகளான முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அப்போது, கழகத்தின் அடித்தள அமைப்புகளை முழுமையாக மறுசீரமைத்தல், உட்கட்சி அமைப்புத் தேர்தலுக்கான நெறிமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் கழக ஆக்கப்பணிகளைத் தீவிரப்படுத்துவது குறித்து நிர்வாகிகளுக்கு விரிவான ஆலோசனைகளை வழங்கினர். மேலும், வருகிற செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக முப்பெரும் விழாவை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியோடு கொண்டாடுவது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றி செல்வன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, நரசிம்மன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி , சந்திரன்

மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், நகரப் பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி,

ஒன்றியச் செயலாளர்கள் தனசேகரன், சுப்பிரமணி, சரவணன், நாராயணன், மகேந்திரன், சாந்தமூர்த்தி, மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், காந்தி, இளையராஜா, செந்தில், குண.வசந்தரசு,எக்கூர். செல்வம்,

குமரேசன், ரஜினிசெல்வம், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, வெங்கட்டப்பன், தம்பிதுரை, பார்த்தீபன், பேரூராட்சி தலைவர்கள் அம்மானுல்லா, சந்தோஷ்குமார், அம்சவேணி செந்தில்குமார் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ்ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, விஜய்ராஜசேகர், வெங்கடேஷ்ராஜா, புஷ்பா, ஜீவானந்தன் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

விழுப்புரம் மத்திய மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

விழுப்புரம், செப்.9

விழுப்புரம் மத்திய மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க , தமிழ்நாடு எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி , கழக மறுசீரமைப்பு தொடர்பான விழுப்புரம் மத்திய

மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. எனது தலைமையில் நாளை (10 .09.2026, வியாழக்கிழமை) மாலை 3.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுச்சேரி மாநில அமைப்பாளர் இரா.சிவா அவர்களும், மாநில மாணவர் அணி செயலாளர் திருமதி. ஜெ.வீரமணி அவர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர , பேரூர் கழக செயலாளர்கள், தலைவர்கள், நிர்வாகிகள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் , பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் (மத்திய) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

பேரா.சபாபதி மோகன் – உடுமலை ஜெயக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயற்குகுழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, செப். 9 -

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி அவர்களின் உத்தரவின்படி, கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (10.09.2026- வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறி

வாலயம், தளபதி மன்றத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.குமார் முருகேஷ் தலையில் தலைமைக்கழக பிரதிநிதிகள் சபாபதி மோகன், உடுமலை ஜெயக்குமார் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்டம் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் காலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:

1. 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை விடுத்துள்ளார்.